RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-28 | 28 ஜனவரி | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மகாராஷ்டிராவில் 100+ பாதிப்பு, ஒரு 'சந்தேக' மரணம் பரவும் 'கில்லியன் பேர் சிண்ட்ரோம்' நோய்

மும்பை, ஜன.28

மகாராஷ்டிராவில் 'கில்லியன் பேர் சிண்ட்ரோம்' நோய் பாதிப்பு ஏற்பட்டு ஒருவர் உயிரிழந்திருப்பதாக முதற் கட்ட மருத்துவ ஆய்வுகள் அடிப்படையில் சந்தேகிக்கப் படுகிறது. இதற்கிடையில் புனேவில் இந்நோய் பாதிப்பு ஏற்பட்டவர்கள் எண்ணிக்கை 100ஐ கடந்துள்ளது.



5 நாள் சிகிச்சைக்குப் பின்.. மகாராஷ்டிராவின் சோலாபூர் மாவட்டத்தில் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது. குறிப்பிட்ட அந்த நபர் தனிப்பட்ட வேலைகளுக்காக சொந்த கிராமத்துக்குச் சென்றுள்ளார். அங்கு அவருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சளி, இருமல் தொந்தரவு ஏற்பட்டு பின்னர் மூச்சுத் திணறல் ஆகியுள்ளது. அதற்காக ஜனவரி 18 ஆம் தேதி சோலாப்பூரில் ஒரு தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். முதலில் ஐசியூவிலும் பின்னர் வார்டிலும் சிகிச்சை பெற்று வந்துள்ளார். ஆரம்பத்தில் உடல் நலம் தேறியுள்ளது பின்னர் மீண்டும் மூச்சித் திணறல் ஏற்பட அவர் ஐசியூவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழப்பதற்கு முன்னர் அவருக்கு பக்கவாதமும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மகாராஷ்டிரா மாநிலம் சோலாபூர் மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் சஞ்சீவ் தாக்கூர் கூறுகையில், "சோலாபூரில் ஒரு தனியார் மருத்துவமனையில் 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது உடல் மருத்துவக் கூராய்வுக்காகக் கொண்டு வரப்பட்டது. முதற்கட்ட ஆய்வின்படி அவர் கில்லியன் பேர் சிண்ட்ரோமால் இறந்ததாகத் தெரிகிறது.

அந்த நபருடைய மருத்துவ சிகிச்சை அறிக்கையை நான் பரிசோதித்தேன். அவர் ஐந்து நாள் சிகிச்சை பெற்றும் கூட நோய்க்கு பலியாகியுள்ளார். உடற்கூராய்வுடன் கிளினிக்கல் கூராய்வையும் நாங்கள் மேற்கொண்டோம். அது மரணத்துக்கான காரணத்தை மருத்துவ ரீதியாக அறியும் கூராய்வு. அப்போது இரண்டு உயிரியல் நிபுணர்கள் மற்றும் நோய்த் தொற்று அறியும் நிபுணர்கள் இருந்தனர். எங்கள் நால்வரின் அறிக்கையின் படி கில்லியன் பேர் சிண்ட்ரோம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

செரிப்ரோ ஸ்பைனல் ஃப்ளூயிட் (சிஎஸ்எஃப்) ரத்த மாதிரிகள் பாலிமெரேஸ் செயின் ரியாக்ஷன் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த ஆய்வு முடிவுகள் வருவதற்கு 5 முதல் 6 நாட்கள் ஆகும்." என்றார். இதற்கிடையில் புனேவில் மட்டும் 100க்கும் மேற்பட்டோர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மகாராஷ்டிர சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது: 'கில்லியன் பேர் சிண்ட்ரோம்' நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கை, கால் தசைகள் வலுவிழக்கும். நரம்பு மண்டலங்களில் பாதிப்பு ஏற்படும். நோயாளிகளால் எழுந்து நடக்க முடியாது. நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலில் குதிங்காலில் வலி ஏற்படும். அதன் பிறகு பாதம் முழுவதும் வலி பரவும். இதன்பிறகு கால்கள், பின்னர் உடல் முழுவதும் வலி பரவும். இதய துடிப்பு, ரத்த அழுத்தம், ஜீரண மண்டலம் பாதிக்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களின் மாதிரிகள் ஐசிஎம்ஆர் ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு உள்ளன. ஆய்வக அறிக்கை கிடைத்த பிறகே தெளிவான பதில் கிடைக்கும். தற்போதைய நிலையில் 'கில்லியன் பேர் சிண்ட்ரோம்' நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிளாஸ்மா மாற்று சிகிச்சை மற்றும் இம்யூனோகுளோபுலின் சிகிச்சை அளித்து வருகிறோம். உரிய நேரத்தில் சிகிச்சை பெறவில்லை என்றால் நோயாளி உயிரிழக்கும் அபாயம் உள்ளது.

மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் இருந்து சிறப்பு மருத்துவக் குழுக்கள் புனேவுக்கு வந்துள்ளனர். அந்த குழுவினர் தீவிர ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களில் புனே நகரின் 7,200 வீடுகளில் நேரடியாக கள ஆய்வு நடத்தப்பட்டு உள்ளது. நோய் அறிகுறி உள்ள வர்கள் உடனடியாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு மகாராஷ்டிர சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொது சிவில் சட்டம் முதலில் அமலாகும் மாநிலமாகிறது உத்தராகண்ட்

டேராடுன், ஜன.28

உத்தராகண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் இன்று (ஜன.27) முதல் அமலுக்கு வருகிறது.

இந்தியாவில் திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல், வாரிசு உரிமை ஆகியவற்றில் ஒவ்வொரு மதத்திலும் வெவ்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அதற்கு பதிலாக அனைத்து மதத்தினரும் ஒரே சட்டத்தை பின்பற்றும் வகையில் பொது சிவில் சட்டம் இயற்றப்பட வேண்டும் பாஜக நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது.

கடந்த 2022 உத்தராகண்ட் தேர்தலில் பாஜக வெற்றி பெற்றால் மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்து. அதன் அடிப்படையில் புஷ்கர் சிங் தாமி தலைமையிலான பாஜக அரசு கடந்த ஆண்டு உத்தராகண்ட் சட்டப் பேரவையில் பொது சிவில் சட்டத்தை நிறைவேற்றியது. இந்நிலையில் இந்த சட்டம் இன்று முதல் அம்மாநிலத்தில் அமலுக்கு வருகிறது.



முன்னதாக நேற்று இச்சட்டம் குறித்து உத்தராகண்ட் முதல்வரின் செயலாளர் சைலேஷ் பகோலி கூறுகையில், "பிரதமர் நரேந்திர மோடி வரும் 28ம் தேதி உத்தராகண்ட் வருகிறார். அவரது பயணத்துக்கு ஒருநாள் முன்னதாக மாநிலத்தில் பொது சிவில் சட்டம் அமலுக்கு வருகிறது. பொது சிவில் சட்ட இணையதளம் 27ம் தேதி தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கப்படுகிறது. முதல்வர் புஷ்கர் சிங் தாமி இதனை தொடங்கி வைக்கிறார். நாட்டில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முதல் மாநிலம் என்ற பெருமையை உத்தராகண்ட் பெற உள்ளது" என்று கூறியிருந்தார். இந்நிலையில் இந்த சட்டம் அமலாவது இந்திய அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

உத்தராகண்ட் யுசிசியின் சிறப்பு அம்சங்கள்: உத்தராகண்ட் பொது சிவில் சட்டத்தில் திருமணம், லிவ் இன் உறவு சார்ந்து சில முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அதன்படி திருமண வயது இருபாலருக்கும் 21 என ஆக்கப்படுகிறது. இதன் மூலம் முறையாக கல்வி பயின்று வேலை பெறுவதற்கு முன்னர் திருமணங்கள் செய்து கொள்வதும் குறையும் என அரசு கூறுகிறது. அதேபோல் அனைத்து திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அம்சம் இச்சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

மேலும் லிவ் இன் உறவில் இருப்போர் 21வது வயதுக்குக் கீழ் உள்ளவராக இருந்தால் அவர்கள் பெற்றோர் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். லிவ் இன் உறவையும் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அல்லது தவறான தகவல் தெரிவித்தால் 3 மாதம் சிறை அல்லது ரூ.25,000 அபராதம் அல்லது இந்த இரண்டுமே விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கண்டனம்: இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் அபிஷேக் மனு சிங்வி இச்சட்டம் குறித்து கூறுகையில், "பொது சிவில் சட்டத்துக்கு ஒருமித்த ஆதரவு இல்லாத நிலையில், மிக முக்கியமான முன்னோடி திட்டத்தை அவசரமாக நடைமுறைப் படுத்தும் விதமாக அதனை உத்தராகண்டில் அமல் படுத்தியுள்ளீர்கள். பொது சிவில் சட்டம் என்பதிலேயே பொது என்ற வார்த்தை இருக்கிறது. அப்படியென்றால் அதை பொதுவாக இந்தியா முழுமைக்கும் தான் அமல்படுத்தியிருக்க வேண்டும். அதை விடுத்து ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சட்டத்தை நிறைவேற்றினால் அது எப்படி பொது சிவில் சட்டம் ஆகும்" என்று பாஜகவை விமர்சித்து, பல்வேறு கேள்விகளையும் முன்வைத்துள்ளார்.

## முதல்வர் ஸ்டாலினை வரவேற்க 25 கி.மீ தூரம் திரண்டு நின்ற மேலூர் மக்கள்!

மதுரை, ஜன.28

மதுரையிலிருந்து மேலூர் சென்ற முதல்வர் ஸ்டாலினுக்கு 25 கி.மீ. தூரம் மக்கள் திரண்டு வழிநெடுகிலும் வரவேற்பளித்தனர். மேலூர் அருகே அரிட்டாபட்டி, நாயக்கர்பட்டியில் வேதாந்தா நிறுவனம் ஏலம் எடுத்த டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் கைவிடப்படுவதாக மத்திய அரசு அரசாணை பிறப்பித்தது. இதையடுத்து மேலூர் பகுதி மக்கள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.



டங்ஸ்டன் சுரங்கத் திட்ட எதிர்ப்பு போராட்டக்குழு நிர்வாகிகள் சென்னைக்கு சென்று முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து நன்றி தெரிவித்து மேலூர் பகுதியில் நன்றி தெரிவிக்கும் விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர். இதை யேற்று நேற்று முதல்வர் மதுரை வந்தார்.

மதுரையிலிருந்து காரில் அரிட்டாபட்டி, நாயக்கர்பட்டிக்கு சென்ற முதல்வருக்கு 25 கி.மீ. தூரம் மக்கள் சாலையோரம் திரண்டு நின்று வரவேற்பு அளித்தனர். கிராமங்களில் செல்லும்போது மக்கள் பட்டாசு வெடித்து முதல்வரை வரவேற்றனர். வழிநெடுகிலும் முதல்வரை வரவேற்று பதாகைகளை ஒட்டியிருந்தனர். முதல்வர் அரிட்டாபட்டிக்கு வந்ததும் பெண்கள் குலவையிட்டு வரவேற்றனர்.

அரிட்டாபட்டி மந்தைக்கருப்பு திடலுக்கு மாலை 5.55 மணிக்கு வந்த முதல்வர் அங்குள்ள மேடையில் சுமார் 10 நிமிடம் பேசிவிட்டு அ.வல்லாளபட்டிக்குச் சென்றார். அரிட்டாபட்டியில் பொதுமக்கள் பலர் முதல்வரிடம் மனு அளித்தனர். 12 ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் பயிற்சி முடித்த டி.கல்லுபட்டியைச் சேர்ந்த பவித்ரா, வேலுநாச்சியார் போல தலைப்பாகை அணிந்து வந்து ஆசிரியர் பணி வழங்கக் கோரி முதல்வரிடம் மனு கொடுத்தார். இடப் பிரச்சினை தொடர்பாக முதுகுளத்தூர் ஏனாதியைச் சேர்ந்த பெண் ஒருவரும் மனு அளித்தார்.

அ.வல்லாளபட்டியில் முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அம்பலகாரர்கள் மகாமுனி, சேதுராகவன் ஆகியோர் மக்கள் சார்பில் முதல்வருக்கு கள்ளழகர் சிலையை நினைவுப் பரிசாக வழங்கினர். அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சாத்தூர் ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், எம்.பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பாராட்டு விழா குறித்து அ.வல்லாள பட்டியைச் சேர்ந்த விஜிதா கூறுகையில், டங்ஸ்டன் திட்டத்தால் மக்கள் 3 மாதங்களாக நிம்மதியின்றி இருந்தனர். டங்ஸ்டன் திட்டம் ரத்துக்கு முதல்வர்தான் காரணம். சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியதை அடுத்து திட்டம் ரத்தாகும் என்ற நம்பிக்கை இருந்தது. குடியரசு தினத்தன்று முதல்வர் எங்கள் கிராமத்துக்கு வந்தது பெருமையாக உள்ளது என்றார்.

இந்திரா கூறுகையில், முதல்வராக இருக்கும் வரை டங்ஸ்டன் திட்டத்தை வர விடமாட்டேன் என்றார். அவர் சொன்னபடி செய்துள்ளார் என்றார். வல்லாளபட்டி விஜய் கூறுகையில், டங்ஸ்டன் திட்டம் ரத்தானதால் அச்சத்தில் இருந்த மக்களுக்கு மனநிறைவை அளித்துள்ளது என்றார்.



நீலகிரி மாவட்டம் முக்கிய சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. மலைகளின் அரசி என அழைக்கப்படும் உதகைக்கு நாள்தோறும் சுற்றுலா பயணிகள் நீலகிரிக்கு வந்த போதிலும், ஏப்ரல், மே ஆகிய கோடை மாதங்களில் அதிகளவில் வருவது வழக்கம். நீலகிரி மாவட்டம் உதகைக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை புரிகின்றனர். தற்போது உதகைஅவலஞ்சி இருந்து. பாலடா வரை,புதிய சாலையை நெடுஞ்சாலைத்துறையினரால் சாலை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது..

## வக்பு மசோதா: 572 திருத்தங்களுக்கு நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் பரிந்துரை

புதுடெல்லி, ஜன.28

வக்பு திருத்த மசோதாவில் 572 திருத்தங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர்கள் அளித்துள்ளனர்.




தற்போதுள்ள வக்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள மத்திய அரசு, இது தொடர்பான திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. மத்திய சிறுபான்மை விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜு, திருத்த மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தினார். இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, இந்த திருத்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இதையடுத்து, பாஜக தலைவர் ஜகதாம்பிகா பால் தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக் குழு இந்த மசோதா தொடர்பாக ஆய்வு நடத்தி வருகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை குழுவின் விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியதை அடுத்து, திருத்தங்களின் ஒருங்கிணைந்த பட்டியல் விநியோகிக்கப்பட்டது. அதன்படி, 572 திருத்தங்களை மேற்கொள்ள குழு உறுப்பினர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

பாஜக மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மசோதாவில் திருத்தங்களைச் சமர்ப்பித்துள்ளனர். அதேநேரத்தில், திருத்தங்களைச் சமர்ப்பித்த உறுப்பினர்களின் பட்டியலில் பாஜகவின் கூட்டணிக் கட்சிகள் எதுவும் இடம்பெறவில்லை.

நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் இன்றைய (திங்கட்கிழமை) கூட்டத்தில் உட்பிரிவு வாரியான திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. இதற்கான கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

வக்பு சொத்துக்களை ஒழுங்குபடுத்தவும், சொத்துக்களை நிர்வகிப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் சவால்களைத் தீர்க்கவும் 1995ம் ஆண்டு வக்பு சட்டத்தை திருத்துவதே இந்த மசோதாவின் நோக்கமாகும்.

## சென்னையில் காலை உணவு தயாரிக்கும் பணியை தனியாரிடம் ஒப்படைப்பதா? அரசுக்கு அன்புமணி கேள்வி

சென்னை, ஜன.28

சென்னையில் காலை உணவு தயாரிக்கும் பணியை தனியாரிடம் ஒப்படைப்பதா என்றும் அந்தந்த பள்ளிகளில் தயாரித்து மாணவர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்களுக்கு பரிமாறப்படும் காலை உணவை தயாரித்து வழங்கும் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது. இதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மாணவர்களின் நலன்களுக்கு எதிரான திமுக அரசின் இந்த முடிவு கண்டிக்கத்தக்கது.

சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கான காலை உணவை இப்போது அம்மா உணவகங்கள் உள்ளிட்ட மையப்படுத்தப்பட்ட சமையலறைகளில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்து வழங்குகின்றனர். அதனால், குழந்தைகளுக்கு ஓரளவு தாமதமின்றி மாணவர்களுக்கு உணவு கிடைக்கிறது. இந்தத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றால் சத்துணவு தயாரிக்கப்படுவதைப் போல பள்ளிகளிலேயே காலை உணவையும் தயாரித்து வழங்குவது தான் சரியானதாக இருக்கும். அதற்கு மாறாக இந்தப் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால் அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

சென்னையில் 356 பள்ளிகளுக்கு காலை உணவு தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தம் 3 தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளன. அவை மொத்தம் 35 மையப்படுத்தப்பட்ட சமையல் கூடங் களில் காலை உணவை தயா ரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதன்படி, சராசரியாக 11 பள்ளிகளுக்கு ஓர் இடத்தில் உணவு தயாரிக்கப்பட்டால், அதை சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு கொண்டு சென்று சேர்க்க குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். அதனால் குழந்தைகளுக்கு சரியான நேரத்திலும், சூடாகவும் உணவு கிடைக்காத நிலை உருவாகும். இது காலை உணவுத் திட்டத்தின் நோக்கத்தையே சிதைத்து விடும்.

காலை உணவை தயாரிக்கும் பணியை தனியாரிடம் வழங்க கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை மாநகராட்சி முடிவு செய்த போது அதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. அதைத் தொடர்ந்து இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஆனால், எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாமல், ஏற்கெனவே கைவிடப்பட்ட ஒரு திட்டத்தை சென்னை மாநகராட்சி அவசர, அவசரமாக செயல்படுத்தத் துடிப்பதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை.

காலை உணவுத் திட்டத்தின் நோக்கமே மாணவர்களுக்கு சரியான நேரத்தில் சூடான உணவு கிடைக்க வேண்டும் என்பது தான். அதை உறுதி செய்யும் வகையில் காலை உணவுத் தயாரிப்பை தனியாரிடம் விடும் திட்டத்தை சென்னை மாநகராட்சியும், தமிழக அரசும் கைவிட வேண்டும். மாறாக, அனைத்துப் பள்ளிகளிலும் சத்துணவுத் திட்டத்திற்காக ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடங்களில் காலை உணவை தயாரித்து வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

# 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு மேடவாக்கம் ஊராட்சியில் அன்னதானம்

மேடவாக்கம் ஜன.28

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம், மேடவாக்கம் ஊராட்சியில் 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர்மான ப.ரவி தலைமையில் அன்னதானம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில்



மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சிவபூஷணம் ரவி மேடவாக்கம் ஊராட்சி பள்ளிகளில் தேசிய கொடியை ஏற்றி வைத்து பள்ளி மாணவ, மாணவிகள், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஊராட்சி பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வெற்றிக் கோப்பை பரிசுகளாக வழங்கினார். உடன் ஒன்றிய கவுன்சிலர் கல்பனா சுரேஷ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எஸ். கோபு, ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் இ.பி. நடராஜன், எச்.டி. போஸ், ரவி கேசவன், ஜி. கோவிந்தராஜுலு, அம்மு கிருஷ்ணமூர்த்தி, கௌரி முருகன், புவனேஸ்வரி மகேஷ், குணசுந்தரி மோகன் மற்றும் ராமையா நகர் எஸ்.சுரேஷ், ஏ.வி.எம்.முருகன், பள்ளி ஆசிரியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கவினா குளோபல் பள்ளியில் 76 ஆவது குடியரசு தின விழா கொண்டாட்டம்

பரமக்குடி ஜன.28

ராமநாதபுரம் மாவட்டம் மேல பார்த்திபனூர் அருகே அமைந்துள்ள கவினா குளோபல் இன்டர்நேஷனல் பள்ளியின் சார்பில் நாட்டின் 76 வது குடியரசுத் தினத்தை முன்னிட்டு அணிவகுப்பு பேரணி ஆனது பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் தமிழர்களின் வீர விளையாட்டான கராத்தே சிலம்பம் மற்றும் பாரம்பரிய நடனம் ஒயிலாட்டம் கரகாட்டம் மயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் சே.முருகேசன் பரமக்குடி



மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கவினா கல்வி குழுமத்தின் தலைவர் கண்ணதாசன் பார்த்திபனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சரவணன் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் காவலர்கள் கலந்து கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்

# தாம்பரத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு காப்பீடு திட்டம் குறித்து விழிப்புணர்வு பேரணி

தாம்பரம் ஜன.28

தாம்பரத்தில் உள்ள டாடா ஏ.ஐ.ஏ. ஆயுள் காப்பீட்டு நிறுவனம் சார்பில் குடியரசு தினத்தை முன்னிட்டு 2047க்குள் அனைவருக்கும் காப்பீடு என்ற முழக்கத்தை வலியுறுத்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி நடைப்பெற்றது.




பேரணியை தமிழ்நாடு மற்றும் பாண்டிசேரி தலைவர் முகமது ஆரிப் மற்றும் ஜியாவுதீன் ஆகியோர் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த பேரணியில் காப்பீடு திட்ட முகவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் காப்பீட்டு திட்டத்தின் அவசியம் குறித்து கைகளில் பாதகை ஏந்தி பேரணியில் கலந்து கொண்டனர்.

இன்றைய காலத்தின் காப்பீடு அவசியம் குறித்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் மூலமும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பேரணியானது தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து சேலையூர் வரை சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் டாடா ஏ.ஐ.ஏ. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தை சேர்ந்த நூற்றுகணக்கானோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை டாடா ஏ.ஐ.ஏ. ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் தாம்பரம் கிளை தலைவர் தீலிபன் செய் திருந்தார். தொடர்ச்சியாக பொது மக்களிடம் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என தெரிவித்தனர்.



திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் குடியரசு தின விழாவை முன்னிட்டு வளாகத்தில் அமைந்துள்ள தேசிய கொடியை கம்பத்தில் இந்திய தேசிய கொடியினை மேயர் தினேஷ்குமார் ஏற்றி மரியாதை செலுத்தினார் பின்னர் அண்ணல் காந்தியடிகளின் திருவருவுச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு நற்சான்றிதழை வழங்கினார்.உடன் ஆணையாளர் இராமமூர்த்தி, துணை மேயர் பாலசுப்பிரமணியம், துணை ஆணையாளர் சுந்தர்ராஜன், தலைமை பொறியாளர் செல்வநாயகம், மாநகர அலுவலர் முருகானந்த், உதவி ஆணையாளர் வினோத், உதவி ஆணையாளர் கணக்கு (பொ) தங்கவேல் ராஜன் மாநகராட்சிக்கு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



ராமநாதபுரம் மாவட்டம் காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குடியரசு தின விழாவில் 'னி' பிரிவில் சிறப்பாக பணியாற்றதற்காக காவலர் செந்தில்குமாருக்கு மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜுத் சிங் காலோன் நற்சான்றிதழ் வழங்கி கௌவிரத்தார் உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் உடனிருந்தார்.

# தேனி மாவட்டம் குடியரசு தினவிழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து, 79 பயனாளிகளுக்கு ரூ.3.78 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவி

தேனி.ஜனவரி 28

தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் (26.01.2025) அன்று நடைபெற்ற குடியரசு தினவிழாவில், மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, தேசிய கொடியை ஏற்றிவைத்து, மூவர்ண பலூன்களை வானில் பறக்கவிட்டு, காவல்துறை அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டு, சுதந்திர போராட்ட தியாகி களின் வாரிசுதாரர்களை கௌரவித்தும்,



சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கங்களையும், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், 79 பயனாளிகளுக்கு ரூ.3,78,15,919 கோடி மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.சிவபிரசாத், முன்னிலையில் வழங்கினார்.

இவ்விழாவில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.1,01,800/ மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் 1 நபருக்கும், ரூ.16,199/ மதிப்பிலான ஸ்மார்ட்போன் 1 நபருக்கும், முன்னாள் படை வீரர் நலத்துறையின் சார்பில் வருடாந்திர பராமரிப்பு மானியமாக ரூ.25,000/ ஒரு நபருக்கும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் ரூ.15,57,800/ மதிப்பிலான வீட்டுமனைப்பட்டா 23 நபர்களுக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை சார்பில் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பிலான கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 14 நபர்களுக்கு கட்டி முடிக்கப்பட்ட வீட்டின் சாவிகளும், தாட்கோ சார்பில் 90% மானியத்துடன் ரூ.2,08,00,000/ மதிப்பீட்டிலான வீடுகள் 20 நபர்களுக்கும், மாவட்ட தொழில்மையம் சார்பில் ரூ.13,79,250/ மதிப்பிலான சிசிடிவி கேமரா, யுபிஎஸ் மற்றும் மின்சாதன பொருட்கள் 4 நபர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.6690/ மதிப்பிலான தையல் இயந்திரம் 3 நபர்களுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ.1,49,000/ மதிப்பிலான விசைத்தெளிப்பான மற்றும் இயற்கை இடுபொருட்கள் 3 நபர்களுக்கும், தோட்டக் கலைத் துறை சார்பில் ரூ.2,46,600/ மதிப்பீட்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளுக்கு 4 நபர்களுக்கும், மீன்வளம் மற்றம் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.2,20,000/ மதிப்பீட்டில் அலங்கார மீன்கள் வளர்ப்பு மற்றும் நவீன மீன் விற்பனை அங்காடி மையம் அமைப்பதற்கு 2 நபர்களுக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 3 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.84,00,000/ கடனுதவியும் என மொத்தம் 79 பயனாளிகளுக்கு ரூ. 3,78,15,919/ மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அபிதா ஹனிப், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன், உதவி காவல் கண்காணிப்பாளர் .கேல்கர் சுப்ரமணிய பாலசந்ரா மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .முத்து மாதவன், தோட்டக்கலை துணை இயக்குநர் நிர்மலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வளர்மதி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயணி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) சாந்தி, முதன்மை கல்வி அலுவலர் இந்திராணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் .வெங்காடச்சலம், தாட்கோ மேலாளர் சரளா, வட்டாட்சியர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியகுளத்தில் அஇஅதிமுக மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்



பெரியகுளம் ஜன.28

தேனி மாவட்டம் பெரியகுளம் அரண்மனை தெரு எம்.ஜி.ஆர் திடலில் அஇஅதிமுக தேனி (கி)மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட மாணவரணி செயலாளர் தினேஷ்குமார் தலைமையில் நடந்தது.தேனி நகர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார், பெரியகுளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அன்ன பிரகாஷ், பெரியகுளம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ராஜகுரு, பொதுக்குழு உறுப்பினர் தவமணி கருப்பசாமி, தேனி நகர் கழக துணை செயலாளர் சுந்தரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கழக அமைப்புச் செயலாளர் சுதா பரமசிவன், தேனி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முருக்கோடை இராமர், தலைமை கழக பேச்சாளர் சீரைத்தம்பி(எ) கிருபானந்தம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கழக விவசாய அணி இணைச் செயலாளர் பெரிய வீரன், கழக அம்மா பேரவை துணை செயலாளர் ஜெயக்குமார், கழக செயற்குழு உறுப்பினர் தனலட்சுமி, மாவட்ட அவைத்தலைவர் முருகன், மாவட்ட கழக இணை செயலாளர் முத்துலட்சுமி, பொருளாளர் வைகை பாண்டி, மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் தவமணி, மாவட்ட பிரதிநிதிகள் சுரேஷ், விஜய் ஆனந்த், மாவட்ட மகளிர் அணி இணைச் செயலாளர் பாப்பா இள முருகன், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் பங்கஜவள்ளி, ஒன்றிய கழக செயலாளர்கள் லோகிராஜன் (ஆண்டிபட்டி மேற்கு ) வரத ராஜன் (ஆண்டிபட்டி கிழக்கு), ஈஸ்வரன் (கம்பம்) ராமர் (கடமலை மயிலை தெற்கு) செந்தட்டி காளை (கடமலை மயிலை வடக்கு) நாராயணசாமி (தேனி மேற்கு), கூடலூர் நகர கழக செயலாளர் அருண் குமார், கம்பம் நகர் கழக அம்மா பேரவை செயலாளர் சிங்கராஜ், பேரூர் கழக செயலாளர்கள் பாலமுருகன் (வடுகபட்டி), மனோகரன் (தாமரைக் குளம்) தினேஷ் (கெங்குவார் பட்டி), மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் தமிழரசன், பாலகிருஷ்ணன், பாலசுப்ரமணி, சரவணகுமார், ராஜேந்திரன், சுதாகர் அழகு பாண்டியன், வீராச்சாமி, மகேந்திரபாபு, சேகர் உதயகுமார், விஷ்ணு கண்ணன், ராஜேஷ், முருகேசன், பெரியகுளம் ஒன்றிய கழக துணை செயலாளர் செல்லப்பாண்டியன், பெரியகுளம் நகர் கழக நிர்வாகிகள் கோம்பையன், வெங்கடேசன், கமலக்கண்ணன், எம்ஜிஆர் இளைஞர் அணி நகர் கழக செயலாளர் கணேசன் உள்பட ஏராளமான நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# பெரியகுளம் அருகே கீழ வடகரை நூலகத்தில் குடியரசு தின விழா கொண்டாட்டம்

பெரியகுளம் ஜன.28

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள கீழவடகரை பொது நூலக துறையின் கீழ் இயங்கி வரும் ஊர் புற நூலகத்தில் 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை வாசகர் வட்ட தலைவர் மோகன் கொடியேற்றினார். நூலகர் ராஜகோபால் வரவேற்புரை யாற்றினார். புரவலர்கள் மின்சார வாரிய ஜெயராஜ், பொறியாளர் ராஜாமணி ஆகிய இருவரும் சேர்ந்து அரசு ஆரம்ப பள்ளியில் படிக்கும் 30 நபர்களுக்கு பள்ளி மாணவ மாணவிகளுக்கு நூலக உறுப்பினர் அட்டை




வழங்கியதுடன் மாணவர்கள் நூலகத்திற்கு வருகை புரிந்து வாசிப்பு திறனை மேம்படுத்தும் வகையில் ரூபாய் 600/செலுத்தி உறுப்பினர்களாக ஏற்பாடு செய்தனர்.

மேலும் பெரியகுளம் தென்கரையில் வசிக்கும் மறைந்த கே.எம் மகாதேவன் மகன் கண்ணன் (எ) முத்துவேல் பாண்டியராஜன் ரூபாய் 1000/ செலுத்தி தன்னை 102வது புரவலராக சேர்த்துக் கொண்டார். மாவட்ட நூலகத் துறை மற்றும் கீழவடகரை நூலக வாசகர் வட்டம் சார்பில் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அழகர்சாமி புரம் பகுத்தறிவாளர் கழக தலைவர் இப்ராஹிம் பாஷா, முன்னாள் இராணுவ வீரர் ஜெயராமன் நாயுடு, நல்நூலகர் சந்திரசேகரன் தினக்கூலி நூலகர் பாண்டிய செல்வி புரவலர்கள், வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட கலந்து கொண்டனர். புரவலர் பூசாரி மணி நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கினர்.

# முடிச்சூர் தெற்கு லட்சுமி நகர் பொது நல சங்கம் சார்பாக 76வது குடியரசு தின விழா

முடிச்சூர் ஜன28

செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர் ஊராட்சிக்குட்பட்ட முடிச்சூர் தெற்கு லட்சுமி நகர் பொது நலச் சங்கம் சார்பாக 76வது குடியரசு தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக பீர்க்கங்கரணை' காவல் ஆய்வாளர் ராஜு அவர்கள் கொடியேற்றி வைத்து சிறுவர் சிறுமியர் களுக்கு இனிப்புகள் மற்றும் பேனா பென்சில் நோட்டுப் புத்தகங்களயும் வழங்கி சிறப்புரை ஆற்றினார் .



இந்த நிகழ்ச்சியில் விடியல் தெற்கு லட்சுமி நகர் பொது நலச் சங்க தலைவர் கற்பகம் சீனிவாசன், துணைத் தலைவர் ப்ரியா, செயலாளர் அம்ரூ, பொருளாளர் திலகவதி, மகளீர் அணித் தலைவி தமிழ்ச்செல்வி, சங்கத்தின் சட்ட ஆலோசகர் சீனிவாசன்

மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் முகம்மது அபுபக்கர், முகம்மது அஸ்ரப், முகம்மது அப்ஸர், புவனேஸ்வரி அம்மாள், திலீப் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



ராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வரும் பெண் தலைமை காவலர் கற்பக சுந்தரி காவல்துறையில் முழு ஈடுபாட்டுடன் சிறப்பாக நேர்மையாகவும் பணியாற்றி வருவதற்கு நேற்று முன்தினம் ராமநாதபுரம் ஆயுதப்படை மைதானத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜூத் சிங் காலோன் பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கி கௌரவித்தார் . உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் உடனிருந்தார்.

# மானாமதுரை தெற்கு சந்தனூர் கிராம சபை கூட்டம் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு

மானாமதுரை ஜன28




சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தெற்கு சந்தனூர் கிராம ஊராட்சியில் நேற்று முன்தினம் (26.01.2025) குடியரசு தினவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையேற்று, சிறப்பு பார்வையாளராக கலந்து கொண்டு தெரிவிக்கையில்,

இவ்வூராட்சியை பொறுத்த வரை கடந்த மூன்றரை ஆண்டுகளில் அரசின் பல்வேறு துறைகளின்சார்பில்பல்வேறுவளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அதில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மட்டும் ரூ.03.94 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சிப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர, இந்தாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்வதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு, அப்பணிகள் மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 06 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளும் வழங்கப் பட்டுள்ளது. தகுதியுடைய பயனாளிகளுக்கு ஆணைகளும் வழங்குவதற்கான நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வூராட்சிக்கென 100 நாள் வேலை பணிகளும் அரசின் திட்டப்பணிகளின் கீழ் வழங்கப்படவுள்ளது. இதுபோன்று, வருவாய்த் துறையின் சார்பில் பட்டா வேண்டி விண்ணப்பித்த நபர்களுக்கும் தகுதியுடைய பயனாளிகளுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுபோன்று, கிராமப்புறங் களின் மேம்பாட்டிற்கென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் வேளாண்மைத்துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் கடனுதவிகள், வேளாண் உபகரணங் கள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தங்களது சுற்றுப்புறங் களை தூய்மையாக வைத்துக் கொண்டு, சுகாதாரத்தினை பேணிக்காத்து, அனைத்திலும் சிறந்து விளங்கி, தங்களது கிராமத்தினை மாதிரி கிரமமாக உருவெடுத்திடும் பொருட்டு, கிராம மக்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் இருந்திடல் வேண்டும் என மாவட்ட ஆட்சி யர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தொழுநோய் விழிப்புணர்வு தொடர்பான உறுதிமொழி மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தலைமையில் ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட அலுவலர் கவிதப்பிரியா, சிவகங்கை வருவாய் கோட்டாட் சியர் விஜயகுமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

கேசவதாசன், மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சோமதாஸ், உமாராணி மற்றும் அனைத்துத்துறை அரசு முதன்மை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# செம்பாக்கம் பகுதியில் உள்ள அகிலா ஹிட்ஸ் குடியிருப்பு நலச் சங்க சார்பில் தேர்தல்


செம்பாக்கம் ஜன28



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட செம்பாக்கம் பகுதியில் உள்ள அகிலா ஹிட்ஸ் குடியிருப்பு நலச் சங்க நிர்வாகிகள் தேர்தல் சிறப்பாக நடைபெற்றது.

2020 முதல் இயங்கி வரும் இந்த குடியிருப்பு பகுதியில் 300க்கு மேற்பட்டோர் வசித்து வருகின்றனர் மூன்று பகுதியாக உள்ள இந்த அடுக்குமாடி குடியிருப்பு ஒவ்வொரு பகுதிகளும் 13 மாடிகளுக்கு மேல் உள்ளது இந்த தேர்தலுக்கு மதன் குமார் மற்றும் நரேஷ் இரண்டு நபர்கள் போட்டியிட்டனர் இந்த தேர்தலில் 173 வாக்குகள் செலுத்தப்பட்டது அந்த வாக்கு அடிப்படையில் நரேஷ் 11 வாக்குகள் மற்றும் மதன்குமார் 162 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றனர் இவருக்கு குடியிருப்போர் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்துக்கள் தெரிவித்தனர். இந்த தேர்தலை பொறுப்பாளராக பாஸ்கர் மற்றும் அவருக்குத் துணையாக வெங்கட கிருஷ்ணன் இருவரும் சிறப்பாக தேர்தல் அதிகாரியாக பணியாற்றினார்கள் வழக்கறிஞர் ஹரிணிஷ் மற்றும் ணிநீழிளிஸிகி சீதாராமன் ஆகியோர் பார்வையாளராக இருந்த தேர்தலை சிறப்பாக நடத்தினார்கள் இதில் காவல்துறை உதவியுடன் சிறப்பாக நடைபெற்றது அதில் தொடர்ந்து வெற்றி பெற்ற மதன்குமார் அவர்களுக்கு பட்டாசுகள் வெடித்து கோவில் சிறப்பு பூஜை நடைபெற்றது இந்த பூஜையில் அகிலா ஹிட்ஸ் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஆர் எஸ் மங்கலம் அருகே கோயில் பாரம்பரிய உரிமை கோரி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனு






ஆர் எஸ் மங்கலம் ஜன.28

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் அருகே அனுச்சகுடி கிராமத்திற்கு பூர்வீக பாத்தியப்பட்ட காளியம்மன் கோயில் பாரம்பரிய உரிமை கோரி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோனிடம் மனு அளித்து முறையிட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் அருகே அனுச்சகுடி கிராம பொது மக்களுக்கு பாத்தியப்பட்ட காளியம்மன் கோயில் உள்ளது. இக்கோயிலை துரைராஜ் என்பவர் நிர்வகித்து வந்தார். இவரது மறைவுக்கு பின் இக்கோயிலை சிலர் கையகப்படுத்தி பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர். இக்கோயில் பாரம்பரிய உரிமை தொடர்பாக பரமக்குடி, ராமநாதபுரம் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்கில் துரைராஜ் மகன் பாஸ்கரனுக்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பை அமல்படுத்த மறுத்து வரும் இந்து அறநிலையத்துறை திருவாடானை ஆய்வாளரை பணி நீக்கம் செய்ய வேண்டும்.

இக்கோயில் பெயரில் பொது மக்களிடம் நன்கொடை வசூல், கையாடல் செய்த கும்பலுக்கு துணைபுரிந்த அறநிலையத்துறை திருவாடனை ஆய்வாளர் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும். அனுச்சகுடி காளியம்மன் கோயில் தற்காலிக அறங்காவலர் நியமனத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். இக்கோயிலில் 2024 அக்.12ல் திருவிளக்கு பூஜை நடத்திய பெண்கள் உள்ளிட்டோர் மீதான பொய் வழக்கை உடனடியாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனுச்சகுடி கிராம பொதுமக்களின் பாரம்பரிய கோவில் நிர்வாகம், பூசாரிகள் உரிமைகள், கடமைகளை 2023 வரை நிர்வாகியாக இருந்த துரைராஜ் இறப்புக்கு முன் இருந்த நிலையை மீண்டும் அமல்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்து மக்கள் நல இயக்கம்

தமிழகத் தலைவர் இளைய ராஜா, இந்து ஜனநாயக பேரவை தமிழகத் தலைவர் அண்ணாத்துரை, இந்து முன்னணி தேவகோட்டை நகர் தலைவர் சுரேஷ், நகர் பொதுச் செயலாளர் மாரியப்பன், இந்து ஜனநாயக பேரவை இளைஞரணி திருவாடானை ஒன்றியத்தலைவர் தனுஷ் உள்ளிட்டோர் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முயன்றனர். அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து மக்கள் குறை தீர் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோனிடம், நீதிமன்ற தீர்ப்பின்படி கோயில் உரிமையை மீட்டுத் தர வேண்டும், கோயிலை ஆக்கிரமித்துள்ளோர்களால் அனுச்சக் குடி கிராம மக்களிடம் நிலவும் அச்சுறுத்தலை களைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் முறையிட்டனர்.

இப்பிரச்னை தொடர்பாக மீண்டும் துரித விசாரணை நடத்தி தீர்வு காண வேண்டும் என திருவாடானை வருவாய்த்துறையினருக்கு அறிவுறுத்தினர்.

# திருவாடானையில் அரசு அலுவலகங்களில் 76 வது குடியரசு தின விழா

திருவாடானை ஜன28



திருவாடானையில் அரசு அலுவலகங்களில் 76 வது குடியரசு தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு நீதிபதி மனிஷ் குமார் தேசிய கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்கள். உடன் நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி ஆண்டனி ரிசாட் சேவ் வழக்கறிஞர் சங்கத் தலைவர் ரமேஷ், அரசு வழக்கறிஞர் கணேஷ் பிரபு மூத்த வழக்கறிஞர் ராஜலிங்கம், கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் அமர்நாத் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்திய இணிப்பு வழங்கினார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலக டிஎஸ்பி சீனிவாசன் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார்.

காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் ஜெயபாண்டியன் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செய்து இனிப்பு வழங்கினார். அரசு துவக்க பள்ளியில் தலைமை ஆசிரியர் கதிரவன் தேசிய கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார். மருத்துவ மனையில் தலைமை மருத்துவர் ஜெகநாதன் தேசிய கொடி யேற்றி வைத்து இனிப்பு வழங்கினார்கள்.

# இந்துமுன்னணி பேரியக்கத்தின் மதுரை கோட்ட பொதுக்குழு கூட்டம்






மதுரை, ஜன.28

இந்துமுன்னணி பேரியக்கத்தின் மதுரை கோட்ட பொதுக்குழு கூட்டம் தேனி தெற்கு மாவட்டம் போடிநாயக்கனூர் நகரில் பாஸ்கரா மஹாலில் மாநில செயலாளர்கள், முத்துக்குமார், சேவுகன் தலைமையில், மாநில நிர்வாக குழு உறுப்பினர் ஜெகன், மதுரை கோட்ட செயலாளர் கோம்பை. கணேசன், மாவட்ட தலைவர் சுந்தர், மாவட்ட செயலாளர் கணேஷ் குமார் முன்னிலையில் நடைபெற்றது.பா.ஜ.க முன்னாள் மாவட்ட தலைவர் றி.சி. பாண்டியன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். நகர பொதுச்செயலாளர் .கண்ணன் வரவேற்புறையாற்றினர்.

மாநில பொதுச்செயலாளர் ஜெ.எஸ் .கிஷோர்குமார் சிறப்புறையாற்றினர்.கோட்ட பொதுக்குழுவில் மாவட்ட பொதுச் செயலாளர்.பால முருகன் இந்து ஆட்டோ முன்னணி மாநில துணைத் தலைவர் ஆச்சி.கார்த்திக், ஹெ.ஒய்.எப்.ஒருங்கிணைப்பாளர் ராம்.செல்வா மற்றும் கோட்ட செயலாளர்கள் பழனி. பாலன், மதுரை அரசுபாண்டி உட்பட மாவட்ட, நகர, ஒன்றிய பொறுப்பாளர்கள் 300 மேற் பட்டோர் கலந்துகொண்டனர்.

திருப்பரங்குன்றம் கோவில் புனிதத்தை களங்கபடுத்தும் நபர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




வேலூர் மாவட்டம், வேலூர் நேதாஜி காவல்துறை காவாத்து மைதானத்தில், நடைபெற்ற 76ஆம் குடியரசு தின விழாவில் சிறப்பாக பணியாற்றிய அரசு ஊழியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி நேரில் அழைத்து பாராட்டி, வாழ்த்து தெரிவித்து, பாராட்டு சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன், மாவட்ட வருவாய் மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செந்தில்குமரன், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



76வது குடியரசு தினத்தை முன்னிட்டு மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிலைமான் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லீலாதேவி, வேளாண்துறை துணை இயக்குனர் மீனாட்சிசுந்தரம், கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலாளர் சுரேஷ் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் சுந்தரராஜன் தலைமையில் மைய அலுவலக வளாகத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர். உடன் தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## அகரம் தென் கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி மக்களின் சரமாரி கேள்விக்கு பதில் அளிக்க முடியாமல் கிராம நிர்வாக அலுவலர் திணறல்



தாம்பரம் ஜன.28

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றம் தொகுதிக்குட்பட்ட அகரம் தென் ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. அகரம் தென் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் அரசு அதிகாரிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் கலந்து கொண்ட கூட்டத்தில் ஊராட்சி மக்களுக்கு தொழு நோய் மற்றும் காச நோய்களுக்கான விழிப்புணர் நிகழ்ச்சி மற்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் அகரம் தென் ஊராட்சி மக்களுக்கு அலட்சியமாக பதில் அளிப்பதும் வார்டு உறுப்பினர், தலைவருக்கும் தெரியாமல் ரியல் எஸ்டேட் ஏஜென்ட்களுக்கு பொறம்போக்கு நிலங்களைப் பற்றி விபரங்களை அழித்து 3 1/2 லட்சத்திற்கு புறம்போக்கு இடங்களை முறைகேடாக விற்பனை செய்துள்ளனர் ஆகவே கிராம நிர்வாக உதவியாளர்கள் சீனிவாசன் மற்றும் சங்கரை பணியிடம் நீக்கம் செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர் வீரக்குமாரிடம் ஊராட்சிக்கு சொந்தமான குளங்களை ஆக்கிரமித்து வெளியூரில் இருக்கும் மக்கள் 90 மேற்பட்ட குடிசைகளை கட்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று மக்கள் கேள்வி மேல் கேள்விகேட்டதில் பதில் சொல்ல முடியாமல் தாம்பரம் தாசில்தாரிடம் கூறி நடவடிக்கை எடுத்து விட்டேன் என்று கூறினார். தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்வரன் தாசில்தாரிடம் பலமுறை புகார் அளித்தோம் நடவடிக்கையும் எடுக்கவில்லை யாரை வைத்து நிலத்தை அளந்தீர்கள் ஊராட்சிக்கு எந்த ஒரு தகவலையும் கொடுக்கவில்லை ஒரு மாதம் ஆகி நடவடிக்கை எடுக்கவில்லை அதற்கு ஊராட்சிக்கு மக்களுக்கு ஆதாரம் அளிக்க முடியுமா கிராம சபை கூட்டத்தில் கேள்வி கேட்டதற்கு பதில் கூற முடியாமல் அமைதியானார் கிராம நிர்வாக அலுவலர் வீரக்குமார். கிராம நிர்வாக உதவியாளர்கள் சீனிவாசன் மற்றும் சங்கரை பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பது பொது மக்களின் கோரிக்கை கேள்விக் குறியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரிகளில் 200 பயிற்சியாசிரியர்கள் தேசியக் கொடியை வரைந்து 26 நிமிடங்களில் வண்ணமிட்டு உலக சாதனை




காரைக்குடி ஜன28

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே அமராவதி புதூரில் அமைந்துள்ள புகழ் பெற்ற ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரிகளில் இந்தியாவின் 76வது குடியரசு தினத்தைக் கொண்டாடும் விதமாக 200 பயிற்சியாசிரியர்கள் இணைந்து 5775 சதுர அடி பரப்பளவில் இந்திய தேசியக் கொடியை வரைந்து 26 நிமிடங்களில் வண்ணமிட்டு உலக சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் மற்றும் ஸ்ரீ இராஜ ராஜன் கல்வி நிறுவனங்களின் கல்வி ஆலோசகர் பேராசிரியர் S. சுப்பையா அவர்களின் ஆலோ சனையின் படி நடைபெற்ற உலக சாதனை நிகழ்ச்சிக்கு ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் R. சிவக்குமார் தலைமையில், ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் K.அங்கயற்கண்ணி முன்னிலை வகிக்க இந்தியாவின் 76வது குடியரசு தினத்தை கொண்டாடும் விதமாக கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் 200 பயிற்சி ஆசிரியர்கள் இணைந்து 5775 சதுர அடி பரப்பளவில் இந்திய தேசியக் கொடியை வரைந்து 26 நிமிடங்களில் வண்ணமிட்டு உலக சாதனை நிகழ்த்தியதுடன் மாணவர்களிடையே தேசப் பற்றை உணர்த்தும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

பயிற்சி ஆசிரியர்களது இச் சாதனையை புதுச்சேரி ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் உலக சாதனை அமைப்பின் கண்காணிப்பாளர்கள் சாதனையாளர்கள் செ.வெங்கடேசன், C.கலைவாணி மற்றும் A. அமுதா ஆகியோர் தொடர் கண்காணிப்பு செய்து உலக சாதனையாக அறிவித்தனர். மேலும் இத்தகைய முயற்சியை மேற்கொண்ட கல்லூரிக்கு தேசிய விருதும் வழங்கி கௌரவித்தனர்.

இச்சாதனை நிகழ்விற்கு நச்சு கலக்காத சுத்தமான கடல் உப்பு 5425 கிலோவும், கோலமாவு 350 கிலோவும் பயன்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பிறகு பயன்படுத்தப்பட்ட உப்புகளானது கல்லூரி வளாகம் மற்றும் சுற்றுச் சுவர்களைச் சுற்றிலும் இடப்பட்டு எறும்புகள் மற்றும் விஷ சந்துக்கள் உள்ளே வராமல் தடுக்கும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

இச்சாதனை நிகழ்ச்சியில் ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரி மற்றும் ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரியின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், பேராசிரியர் கள் முனைவர் KR.பாலசுந்தரி SP.வித்யா, S.மெய்யம்மாள் மற்றும் பேராசிரியர்கள், பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## 9, 38, 651 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகள் பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மகிழ்வுடன் நன்றி



மதுரை, ஜன28

உழவுத் தொழிலைப் போற்றும் தமிழர்களின் பண்பாட்டுத் திருநாளாகவும், உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளையும் போற்றுகின்ற நன்னாளாகவும் பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கிலோ பச்சரிசி 1 கிலோ சீனி, 1 முழு கரும்பு மற்றும் வேட்டி சேலை அடங்கிய தொகுப்புகள் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

13.01.2025க்குள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் முழுமையாக வழங்கிட திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து மதுரை மாவட்டத்தில் 09.01.2025 முதல் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கிட விரிவான ஏற்பாடு செய்யப்பட்டு கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கி வரும் முழுநேர நியாயவிலைக் கடைகள், பகுதிநேர நியாய விலைக் கடைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் நியாயவிலைக் கடைகள் என அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் இப்பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற்ற பயனாளி நேசமலர் அவர்கள் தெரிவித்ததாவது; என் பெயர் நேசமலர். நாங்கள் மதுரை மாவட்டம் ஒத்தக்கடை கிராமத்தில் வசித்து வருகிறோம். வீட்டிலேயே சிறிய தையல் இயந்திரத்தை கொண்டு தையல் வேலை செய்து வருகிறேன். எனது கணவர் பெயிண்டராக வேலை பார்த்து வருகிறார். பொங்கல் பண்டிகையை எங்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் வீட்டு சீதனம் போல் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கியுள்ளார்கள். இதில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சீனி, 1 முழு கரும்பு மற்றும் வேட்டி சேலை உள்ளன. மேலும், நான் கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மாதம் ரூபாய் 1000 பெற்று பயனடைந்து வருகிறேன். இந்த மாதம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் மூலம் ரூபாய் 1000 உரிமைத் தொகை வழக்கமாக கிடைக்கப்பெறும் நாளுக்கு முன்னதாகவே எனது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இத்தகைய சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன், இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் திருச்சி அரசு ஆரம்பப் பள்ளியில் குடியரசு தின விழா



திருச்சி, ஜன.28

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா கோட்டார் பட்டியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளியில் அமைப்பின் சார்பில் கொடியேற்றிசில பரிசு பொருள்கள் இனிப்புகள் வழங்கியுள் ளோம் இதல் தலைமை ஆசிரியர் ஆரோக்கியதாஸ் வரவேற்பு கூறி கோட்டார் பட்டி தலைவர் நல்லுசாமி கொடியேற்றி சிறப்பு விருந்தினர்களாக அமைப்பின் நிறுவன பொதுச்செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ், மாநில ஆலோசகர் ராமன் மாநிலத் துணை ஆலோசகர் பெஞ்சமின் வழக்கறிஞர் சாருமதி பைரவர் மாநில மகளிர் அணி தலைவர் சுபா மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநில மகளிர் அணி செயலாளர் பானுமதி மாநில இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜான் திருச்சி மாவட்ட தலைவர் ராஜ்குமார் திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜசேகர் திருச்சி மாவட்ட துணைத்தலைவர் சந்திரா மகளிர் அணி செயலாளர் ரேவதி திருச்சி மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் யாஸ்மின் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராமன் மற்றும் ஆசிரியர்கள் குழந்தைகள் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஒன்றியம் காரைக்குளம், கண்ணமங்கலம், தாயமங்கலம், தடியமங்கலம் ஆகிய ஊர்களில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் குடியரசு தினத்தன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சுப.மதியரசன் வட்டாட்சியர் முருகன் கொள்முதல் அலுவலர் அயன்ராஜ் கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் சுப.தமிழரசன் சிவகங்கை மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சுப.அன்பரசன் மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி.கண்ணன் சண்முகம், சேதுராமன், சத்தியேந்திரன், ஜெயராமன், சேகர், கோபி, செல்வக்குமார் பேரூர் நிர்வாகிகள் இபுராஹிம், ஜெயினுலாபுதீன் பைரோஸ் கான் மற்றும் அரசு அலுவலர்கள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பழனி அருகே தொடர் திருட்டு வழக்கில் ஈடுபட்டவர் குண்டர் சட்டத்தில் கைது



பழனி ஜன28

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பகுதியில் தொடர் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த பழைய ஆயக்குடி பகுதியைச் சேர்ந்த பொன்ராஜ் என்ற இளைஞரை காவல்துறையினர் பலமுறை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மேலும் தொடர்ந்து பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் இரவு நேரங்களில் வீட்டுக்குள் புகுந்து திருடுவது வழக்கமாக வைத்திருந்த நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அறிவுறுத்தலின் படி மாவட்ட ஆட்சியர் பூங்கொடி உத்தரவின்படி. காவல் ஆய்வாளர் ரமேஷ் குமார் சார்பு ஆய்வாளர் ஆனந்த் அவர்களின் தீவிர முயற்சியில் குற்றவாளி பொன்ராஜ் மீது குண்டாஸ் சட்டம் பாய்ந்தது. தொடர்ந்து குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட பொராஜ் மதுரை மத்திய சிறையில் அடைத்தனர்.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜீத் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டாரங்கில் நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் பல்வேறு விபத்துகளில் மரணமடைந்த நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் விதம் 3 நபர்களுக்கு ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் பயனாளிகளிடம் வழங்கினார்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வைகறை பவுண்டேஷன் சார்பாக, அதன் நிர்வாக இயக்குநர் கூஷிஸி.ஸிவி. விஜய் வீரப்பன் பெரும் கொடையாக, 2 நவீன இருசக்கர நாற்காலிகள் பஸ்வான் ( ரயில்வே ஸ்டேசன் மாஸ்டர்), கோட்ட வணிக ஆய்வாளர் தேசிகன், ரயில் பயணச்சீட்டு வழங்கல் ஊழியர் நரசிம்மன் ஆகியோரிடம், காரைக்குடி வட்ட ரயில் பயணிகள் நலச்சங்கத்தலைவர் இராமநாதன் தலைமையில், செயலாளர் பி.கோவிந்தசாமி (எ) இராமு முன்னிலையில் வழங்கினார்கள்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து பாம்புகடி மரணமடைந்தவர் குடும்பத்தாருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா காசோலையை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் உடன் உள்ளார்.



மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாத்தூர் ஊராட்சியில் 76 வது குடியரசு தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் கணக்கர் திருமலை செல்வி ஊராட்சி செயலாளர் உமா மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161